PHONE No. 55630

REGD. No. M. 6[illegible]

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 151

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர். அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: கார்த்திகை 22உ திங்கள் (7—12—53) ★ ★ ★ வெளியூர்: கார்த்திகை 23உ செவ்வாய் (8—12—53)

நேருவுக்கு கர்நாடகர் அறைகூவல்!

நிர்வாக நலமல்ல-மக்கள் நலம்தான் முக்கியம்!

முன்னாள் அமைச்சர் கரந்த் போர்ப் பரணி!

பெல்லாரி, டிச 5—

"சென்னிந்தியாவில் உள்ள முக்கிய மொழிவழி மக்களின் கோரிக்கையை மறுக்க நினைத்தால், அதை எல்லா வகையிலும் விளக்கமாகக் கூறிவிட வேண்டும். இதை விட்டுவிட்டு மறைமுகமாகவும் ஐயத்திற்கிடமாகவும் கூறவேண்டாம். எனவே, மொழியையே அடிப்படையாகக்கொண்டு மாநில ஏற்பாடுகளை ஆராயவேண்டியது உயர் அதிகாரக் குழுவின் தலையாய கடமையாக இருக்கவேண்டும்." —கே. ஆர். கரந்த்.

"1954—அக்டோபர் முதல் நாள் முன்னரே, கர்நாடக மாநிலம் அமைப்பதற்கான ஒரு எல்லை நிர்ணயக் குழுவை, இவ்வாண்டு ஆகஸ்டு திங்களில் நியமிக்க வேண்டும் என்று, தோங்கரேயில் கூடிய அகண்ட கர்நாடக நிர்மாண சங்க மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதை, இந்திய சர்க்கார் இதுவரை நிறைவேற்றத் தவறியதற்கு, இம்மாநாடு வருத்தத்தையும், அதிருப்தியையும் தெரிவித்துக்கொள்ளுகிறது.

—இவ்வாறு, ஒரு தீர்மானத்தை அம்பி நகரில் கூடிய அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்தின் மாநாட்டில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மாநாட்டிற்கு முன்னாள் அமைச்சரான கே. ஆர். கரந்த் அவர்கள் தலைமை வகித்தார்.

மொழியை மட்டும் மூலமாகக் கொள்ளாமல், பிறவற்றையே குறியாகக் கொண்டு வெறும் நிர்வாகத்தைச் சுலபமாக்கும் நோக்கத்தோடு மாநிலங்களைத் திருத்தி அமைக்க யூனியன் சர்க்காரால் நியமிக்கப்படவிருக்கும் உயர் அதிகாரி குழுவைக் குறித்தும், அதன் பணி பற்றி பிரதமர் நேருவால் அடுத்தடுத்து கூறப்பட்டு வரும் விளக்கங்கள் பற்றியும் முன்னாள் அமைச்சர் கண்டித்துப் பேசினார்

இந்த உயர் அதிகாரக் குழுவின் பணி குறித்து நேரு தரும் விளக்கம், மொழி வழி மாநிலக் கோரிக்கையினரால் ஒப்புக்கொள்ளக் கூடாததாகவும், தெளிவற்றதாகவும், வரையறுக்கப்படாததாகவும் உள்ளது என்ற ஒரு தீர்மானமும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"பிரதம மந்திரியின் இத்தகையப் பேச்சுகள், பலகாலமாகப் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்தியாவைத் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற உண்மையை, அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவை மொழி வழியில் உருவாக்க வேண்டும் என்ற கோட்பாட்டை, தாமும், தமது சர்க்காரும் வேண்டுமென்றே தொலைத்துக் கட்டும் நோக்கத்துடன் செய்யப்படுகின்றன."

"ஐதாராபாத்தில் இணைந்துள்ள மராட்டியம், கன்னடம், ஆந்திரம் ஆகிய மூன்று மொழி வழிகளும், மொழி அடிப்படையில மாநில அமைப்புக்கு ஒத்த மிகத்தக் கிளர்ச்சியில ஈடுபட்டு இருந்தும், இவர்கள் விருப்பப்படி திருத்தி அமைக்கப்பட்டாலன்றி, தென்னிந்தியாவை மொழி அடிப்படையில் பிரிப்பது என்பது நடைமுறையில் உருவாக முடியாது என்பது தெரிந்திருந்தும், மொழி வழி ஏற்பாட்டைத் தட்டிக் கழிப்பது, ஐதராபாத்தைப் பிரிக்கக் கூடாது என்ற இந்திய சர்க்காரின் உள்ளக் கிடக்கையை விளக்கமாகக் காட்டுகிறது"

பிரதமரின் பிடிவாதத்தினாலும், இந்திய சர்க்காரின் போக்கினாலும்," நாட்டுக்குள் ஒற்றுமை வேண்டிய இந்தச்

(2-ம் பக்கம் பார்க்க)

குழப்பத்திற்கு வித்திடும் குறளை!

மாறான பலனைத்தான் எதிர்பார்க்கலாம்!

புதடெல்லி, டிச. 6—

இந்தியாவை மொழிவாரியாகப் பிரிக்கக் கூடாது என்ற கொள்கையையுடைய 24 டெல்லி சட்ட சபை உறுப்பினர்கள் பம்பாய் காங்கிரஸ் தலைவரான எஸ். கே. பட்டீல் தலைமையில் கூடினர்.

"நாட்டில் மேற்கொண்டு தகராறைக் கிளப்புவது எங்கள் நோக்கமல்ல; நாட்டின் ஒற்றுமையே எங்கள் இலட்சியம்" என்று, எஸ். கே. பட்டீல் பேசுகையில் கூறினார்.

"மாநிலப் பிரிவினைக்கு எதிராகப் பிரசாரம் செய்யவேண்டும்," என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஹிரோஷிமாவை அழித்தவர் இறந்தார்

வாஷிங்டன், டிச. 6—

ஜப்பானில் ஹிரோஷிமா மீது அணுகுண்டு வீசுவதில் முக்கிய அங்கம் வகித்த ரியர் அட்மிரல் வில்லியம் பார்சன் இன்றிரவு மாரடைப்பினால் காலமானார். இவருக்கு வயது 54.

கவர்னருக்குள்ள அதிகாரம் போதாதாம்!

சர்வாதிகாரம் தேவை என்கிறார் - முன்னாள் காங்கிரஸ் கிருபளானி!

மைசூர், டிச. 5—

"தற்சமயம் இந்தியாவில் கவர்னர்கள் வகித்துவரும் பதவி மிகவும் சிறுமைத்தனமானது. ஜனநாயகம் தலைதூக்கி விட்டதெனக் கூறுகிறார்களே அந்த ஜனநாயகத்துக்கும், கவர்னர்களுக்கும் சம்பந்தமே இல்லை"

"தனது சொந்த கடமைகளைத் தானே நடத்திச் செல்லவும் கவர்னர்களுக்கு அதிகாரமில்லை. கவர்னர்கள் எங்கேயாவது பேச விரும்பும் பேச்சை முதலில் மாநில முதலமைச்சர் முன்னதாகவே படித்து ஆமோதிக்க வேண்டும்,"

—என்று கவர்னர்களின் நிலைபற்றி, இங்கு டவுன் ஹால் மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில், ஜே. பி. கிருபளானி கூறினார்.

இத்தகைய கவர்னர் பதவி தனக்களிக்கப்பட்டபோது தான் அதை ஏற்க மறுத்ததற்கான காரணங்களை விளக்கினார்.

கவர்னர் அந்தந்த மாநில முதலமைச்சர்களின் அனுமதியின்பேரில்தான் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும். அப்படியானால் கவர்னரின் வேலைகள்தான் என்ன?

"பெண் பள்ளிகளைத் திறந்து வைத்தல், உணவு விடுதி, சினிமா தியேட்டர்களைத் திறந்துவைத்தல், சிற்சில வேளைகளில் மிட்டாய்க் கடைகளைத் திறந்துவைத்தல் போன்ற வேலைகளில்தான் கவர்னர்கள் ஈடுபடுகிறார்கள்."

"வெள்ளையன் விட்டுச்சென்ற மாளிகைகளில்தான் இந்த கவர்னர்கள் வசிக்கிறார்கள். காந்தியார் அந்த மாளிகைகளெல்லாம் ஏழைகளின் மருத்துவ மனையாக மாற வேண்டுமென்றார். அந்த அரண்மனையில்தான் கவர்னர்களின் பொழுதுபோக்கிற்காக இசை விருந்துகளும், நாட்டியக் கச்சேரிகளும் நடைபெறுகின்றன. வெள்ளையர் விட்டுச்சென்ற சாதனங்களை இவர்கள் அநுபவிக்கின்றனர்.

"இதில் பரிதாபத்திற்குரியது என்னவென்றால், உண வருந்துவதற்காக வெள்ளையன் வைத்திருந்து விட்டுச் சென்ற கத்தி, கரண்டிகளை எப்படி உபயோகிப்பது என்று தெரியாமல், இந்தக் கவர்னர்கள் விழிப்பதுதான்!"

இவர்கள் மேஜையின் மீது அச்சிட்ட உணவுப் பட்டியல் வைக்கப்படுகிறது. இந்த முறை வெள்ளையன் காலத்தில் கையாளப்பட்டதாகும்," என்றார்.

[குறிப்பு: சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா 9—11—53-ல் காஞ்சிபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் கவர்னரின் நிலைமை குறித்துப் பேசியிருக்கிறார்; கவர்னர்களை யாரும் கவனிப்பதில்லையென்று எடுத்துக்காட்டிப் பேசியிருக்கிறார்]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தோழர் கே. ஏ. மதியழகன் வரவேற்பு விழா

★

"10—12—53 வியாழன் காலை 9 மணிக்கு, தி. மு. கழகத் துணைச் செயலாளர், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் சென்னைச் சிறையிலிருந்து விடுதலைபெறுவார்.

"அன்று மாலை, சூளை, டான்ஸ்மித் நகர் மைதானத்தில், தோழர் மதியழகனை வரவேற்க, வரவேற்புக் கூட்டம் நடைபெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. வரவேற்பு நிகழ்ச்சியில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களும், மற்றவர்களும் கலந்துகொள்வர்.

"எனவே, டிசம்பர் 10-ந் தேதியன்று நடைபெற இருக்கும், காலை, மாலை இரு நிகழ்ச்சிகளிலும், கிளைக் கழகங்களும், கழகத்தைச் சார்ந்த படிப்பகங்கள், மன்றங்கள் ஆகியவைகளும் கலந்துகொண்டு வரவேற்பு விழாவைச் சிறப்பிக்க வேண்டு"மென்று, தி. மு. கழக சென்னை மாவட்டச் செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தூத்துக்குடி சதி வழக்கு

—[o]—

இருவர் வந்தால் போதுமென நீதிபதி உத்தரவு

திருநெல்வேலி, டிச. 5—

தூத்துக்குடி சதி வழக்கில் பிணைக்கப்பட்ட 64 தோழர்கள் ஜாமீனில் விடுதலையாகியிருக்கிறார்கள். இவர்களில் 61 பேர் தாங்கள் ஏழைகள் என்றும், ஆலை அல்லது கடைகளில் வேலை செய்து வருகிறவர்களென்றும், வழக்கு விசாரணைக்கு நாள்தோறும் தாங்கள் வந்துபோவதால் பிழைப்புக்கு ஊறு நேர்ந்திருப்பதாயும், ஆகவே தங்களுக்குப் பதில் வேறு ஆட்களை விசாரணைக்கு வருகை தர அனுமதிக்க வேண்டுமெனவும் மனு கொடுத்தனர்.

அதன் பேரில், 61 தோழர்களுக்குப் பதில் தோழர்கள் குருசாமியும், மகாலிங்கமும் வந்தால் போதுமானது என நீதிபதி உத்தரவிட்டார்.

இந்தியாவில்......!

புதுடில்லி, டிச. 4—

இந்தியாவில் மதுபான வகைகள் இறக்குமதி 1950-ம் ஆண்டு முதற்கொண்டே அதிகரித்து வருகிறது சென்ற ஆண்டில் இந்த இறக்குமதி 1950-ல் இறக்குமதியானதைவிட 40 சதவிகிதம் அதிகமாகும்.

1950-ல், பீர், ஒயின், பிராந்தி, ஜின், ரம், விஸ்கி இவை எல்லாம் சேர்ந்து 10,75,631 காலன்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

1951-ல், இவை 12,94,036 காலன்கள்.

1952-ல், இவை, 14,79,658 காலன்கள்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

147-வது நாள்

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 6363-1-8

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7—12—1953 திங்கள்

இருவர் மனக்குறை!

"கோழி மேய்த்தாலும் குர்பனியான் கோழி மேய்க்க வேண்டும்" என்பது, ஆங்கிலேயர் இந்த மண்ணில் கால் வைத்த கால முதல் வழங்கிவரும் பொருள் நிறைந்த மொழியாகும். இந்த மொழியில் பொதிந்து கிடக்கும் உண்மை நல்ல வருமானம் என்பது மட்டுமல்ல; பிறர் மதிப்பும், அகற்கரான அதிகார அந்தஸ்தும் அந்த மொழியில் அடங்கி இருக்கின்றன.

பிரிட்டிஷ் ஆட்சி இப்பொழுது இல்லை என்பது உண்மை. ஆனால் ஆட்சி முறை முதல், காஷ்மீர் பண்டிதரான பண்டித நேரு தமது பிறந்த நாளன்று ஆங்கில முறைப்படி கேக்கில் மெழுகுவத்தி கொளுத்தி வைத்து மகிழ்ந்த கலாசார துறை ஈறாக, ஆங்கிலேயர் தாராளமாகப் போட்ட பிச்சைதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த கவர்னர்களுக்கும் சிறந்த அதிகாரம் உண்டு; ஆனால், அதற்கும் கடுமையான கட்டுப்பாடுகள் உண்டு. கட்டுக் குதிரைகள்போல் அவர்கள் அடங்காப்பிடாரிகளாக நடந்துகொள்ள முடியாது. விதிவிலக்கு என்னும் கடிவாளம், அவர்களுக்கும், அரசியல் சட்டப் புத்தகத்தில் போடப்பட்டுதான் இருந்தது.

— இட்லருக்குச் சர்வாதிகாரி என்றுதான் பெயர். நினைத்ததைச் செய்யக் கூடிய எதேச்சாதிகாரம் அவனுக்கு இருந்தது என்பது உண்மைதான். ஆனால், அவன் போக்கில் குறுக்கிடுவதற்கு சொல்லலங்காரத்திறனாவது அரசியல் சட்டம் என்று ஒன்று இருக்கத்தான் இருந்தது. அதுவுமல்லாமல், அவன் போக்கை விமர்சிக்கவும், திருத்தவும் உள்ளே நெருங்கிய கூட்டுத் தோழர்கள் பலர் இருக்கத்தான் இருந்தார்கள். இந்த உண்மையை இட்லர் வாழ்க்கை வரலாறு நமக்கெல்லாம் விளக்கமாகச் சுட்டிக் காட்டுகிறது.

மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மின்னல், இடி, மழை, ஞாயிறு, திங்கள், விண்மீன், அவைகளின் அசைவுக்கு விதிமுறை உண்டு. பருவமாற்றம், தட்பவெப்ப நிலை எல்லாம் வெறும் குழப்பத்தின் விளைவு அல்ல.

அந்தக வரலாற்றில் பயிற்சி உடையவர்கள் இந்த உண்மையைத்தான் நமக்குப் போதிக்கிறார்கள். இயற்கை ஒரு ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு நடைபெறுகின்ற காரணத்தால்தான், விநாடி, நிமிடம், மணி, நாள், ஆண்டு என்று வரையறுத்துக் காட்ட மனிதனால் முடிகிறது என்பதை நாம் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

காட்டில் வாழும் கொடிய வன விலங்குகளிடத்தில்தான் சர்வாதிகாரம் இருந்து வருகிறது. பலம் மிகுந்த சிங்கமும் புலியுங்கூட, பசித்தால்தான் பலம் குறைந்த மற்ற பிராணிகளைக் கொல்ல முயலுகின்றன. இயல்பாகவே ரத்தவெறி கொண்ட அந்தக் காட்டு மிருகங்கள்கூட தாய் பெற்றெடுத்தச் சேய்களிடம் தாய்ப்பற்று காட்டுகின்றன. எனவே, அவைகளிடையேகூட ஏதோ ஒரு வகையான கட்டுப்பாடு அல்லது உறவுமுறை இயல்பாகவே அமைந்திருக்கிறது என்பதை நாம் யூகித்துக்கொள்ளலாம்.

இவ்வளவும் நாம் கூறினது, ஒரு ஒழுங்குக்கு உட்படாமல் உலகில் உயருள்ளவற்றிலும் சரி, உயிரற்றவற்றிலும் சரி எந்த நிகழ்ச்சியும் குழப்பமாக நடைபெறுவது அறவே இல்லை என்பதை வலியுறுத்துவதற்கே யாகும். நிற்க,

சில நாளைக்கு முன்பு நாகபுரிக்குச் சென்ற சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள், கவர்னருக்குள்ள அதிகாரம் பற்றிச் சலித்துக் கொண்டார்; அதிகாரம் ஒன்றுமில்லை என்று குறைபட்டுக் கொண்டார்.

இப்பொழுது காங்கிரஸ் முதலிடத் தலைவர்களிலே ஒருவரும், முன்னாள் காங்கிரசின் செயலாளராக பல ஆண்டு இருந்தவரும், இக்காலை பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் தலைவராக இருப்பவருமான ஆச்சாரியார் கிருபலானியும், அதே தோரணையில் பேசி இருக்கிறார். அவரை ஒரு கவர்னராக நியமிக்க யூனியன் சர்க்கார் விரும்பினதாகவும், தாம் அந்த அதிகாரமில்லாத சேவகம் என்று கருதி ஏற்க மறுத்துவிட்டதாகவும், கிருபலானி குறைபடுகிறார்.

சென்னையில் இப்பொழுது கவர்னராக இருக்கிற ஸ்ரீ பிரகாசா, அவர் கவர்னராக நியமனம் பெறுவதற்கு முன் பழுத்த காங்கிரஸ் கட்சிக்காரராக இருந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவர் கவர்னர் என்னும் பொறுப்புள்ள தலையாய பதவியில் அமர்ந்த பின்னருங்கூட அவருக்குப் பழைய காங்கிரஸ் கட்சி மனப்பான்மை மாறவில்லை என்பது வெட்டவெளிச்சம்.

தென்னாட்டு மக்களால் ஒதுக்கப்பட்டுக் கிடந்த ஆச்சாரியாரை, மேல் சபைக்கு நியமனம் செய்து, அமைச்சர் குழு அமைக்க உரிமையளித்தது முதல், இன்று வரை கவர்னர் பிரகாசா தம்மை ஒரு காங்கிரஸ் கட்சி தீவிர உறுப்பினராகத்தான் கருதி எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறாரேயல்லாது, பதவிக்குள்ள பொறுப்புக்கேற்ப நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் நடுவராக அவர் நடந்து கொள்ளுகிறார் என்று சொல்வதற்கில்லை.

ஸ்ரீ பிரகாசா கவர்னர் ஆவதற்குமுன், காங்கிரஸ் கட்சியின் கோட்பாடுகளைப் பேசப்பேசவும், மாறுபட்ட கருத்துக்களைத் தூற்றித் தூற்றியும் பழக்கப்பட்டு விட்டவர் என்பதை அனைவரும் அறிவர். அத்தகைய பயிற்சி பெற்று இருப்பவர்தான் ஆச்சாரியார் கிருபலானியும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பார்கள். அந்தப் பழக்கத் திற்குப் பலியானவராக இருக்கிற காரணத்தால்தான், ஒரு கவர்னருக்குள்ள அதிகாரம் போதாது என்று ஸ்ரீ பிரகாசா சலிப்படைகிறார். அவர் போலத்தான் தனது பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியாத காரணத்தால் கவர்னர் பதவியை ஏற்றுக்கொள்ள கிருபலானி மறுத்துவிட்டார் என்று நாம் கொள்ளுவது குற்றமாகாது.

இந்திய சட்டத்தில் நெருக்கடியான காலங்களில், கணிசமான அளவு சர்வாதிகாரம் செய்யலாம் என்று கவர்னர்களுக்கு உரிமை தரப்பட்டு இருக்கிறது. அப்பொழுதும் கூட அந்த சர்வாதிகார மோகம் கொண்ட இவ்விருவர் மனக்குறையும் மாறுமா என்று நாம் எண்ணுகிறோம். ஏனெனில், கவர்னர்கள், குடியரசுத் தலைவராக உள்ள ஒரு பெரிய சர்வாதிகாரியின் கீழுள்ள குட்டி சர்வாதிகாரிகள் ஆவார்கள். எனவே அந்த நிலைகூட இவர்களுடைய அதிகார ஆசையைப் பூர்த்தி செய்ய உதவாது.

இப்போதுள்ள இந்திய அரசியல் சட்டத்தின்படி, ஒரு மாநிலத்தின் நிர்வாக பீடத்தின் தனிப்பெரும் தலைவர் கவர்னர்தான். அவருக்கு மறைமுகமாக எல்லா அதிகாரமும் தான் இருக்கிறது. அவருடைய அறிவையும், ஆற்றலையும், தமது அமைச்சர்குழு மூலம் நடைமுறைக்குக் கொண்டு வருவதை இந்திய அரசியல் சட்டம் தடுக்கவில்லை. ஆனால் 'நான் செய்தேன்' என்று சொல்லிக் கொள்ளத்தான் சட்டத்தில் இடமில்லை. மாறுபட்டக் கருத்தினரை தம் மனம் போனபடி வாட்டி வதைக்க, நவீன கால மக்களாட்சிச் சட்டம் எதுவும் எந்தத் தனி நபருக்கும் உரிமை கொடுக்காது.

சேவை செய்வதுதான் தமது கடமை என்று ஸ்ரீ பிரகாசா கொண்டிருப்பாரானால், இருக்கிற அதிகாரம் போதாதே என்று அங்கலாய்த்துக் கொள்ளுவதற்கு அவருக்கு அவசியமே ஏற்படாது.

மக்களுக்குச் சேவை செய்வதையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ள அனைவருக்கும், ஒரு கவர்னருக்குள்ள அதிகாரம், அந்தஸ்து, ஊதியம் ஆகியவை அரிய பேர் வாய்ப்பாகும். இவை போதாதென்று, கவர்னர் பிரகாசாவும், கிருபளானியும் குறைபடுவது, அந்தப் பதவிக்கேற்பத் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ள அவர்களுக்குள்ள இயலாமையைத்தான் படம் பிடித்துக் காட்டுவதாக இருக்கிறது.

'ஆடமாட்டாதவளுக்குக் கூடம் கோணல்' என்ற கதையைத்தான் இருவர் மனக்குறையும் நமக்கு நினைவுறுத்துகிறது.

பெரியார் உடல் நிலை

சென்னை, டிச. 7—
திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. இன்று மாலை 5 மணிக்கு, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சை முடிந்து இல்லம் சேர்ந்தார். 10 நாட்கள் மருந்துண்ண வேண்டுமென்று டாக்டர் கூறியதற்கிணங்க, பெரியார், நாளை ஈரோடு செல்வார்.

டில்லி காரிய கமிட்டியில!

புதுடில்லி, டிச. 6—
காலனி ஆதிக்கத்தை நீக்க எடுக்கும் முயற்சிகளையும், உள்நாட்டில் அரசியல் காரணங்களுக்காக பட்டினி கிடப்பதைக் கண்டித்து, டில்லி காரியக் கமிட்டியில் இரு தீர்மானங்கள் நிறைவேறின.

ஆரியசங்கரனுக்கு 9 மாதக் கடுங்காவல்

சென்னை, டிச. 5—
சென்னை சட்டசபை சபாநாயகர் வீட்டில் புகுந்து கலாட்டா செய்ததாகவும், சொத்துக்கு சேதம் விளைவித்ததாகவும், தொடரப்பட்டிருந்த வழக்கில், ஆரியசங்கரன், குப்புசாமி ஆகிய இருவருக்கும் இன்று ஜார்ஜ் டவுன் மாஜிஸ்திரேட்டு தலா 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

மேற்படி இருவர் மீதும், மற்றும் 9 பேர் மீதும், போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தனர். பாக்கி 9 பேர் மீது குற்றம் ருசுவாகவில்லை என்று கூறி மாஜிஸ்திரேட் அவர்களை விடுவித்தார்.

எஞ்சின்கள் இறக்குமதி!

டோக்கியோ, டிச. 4—
இந்திய சர்க்கார், 125 ரயில் எஞ்ஜின்களுக்கான ஆர்டரை இரு ஜப்பானிய கம்பெனிக்கு அளித்துள்ளனர். இதன் மதிப்பு 3,45,00,00,000 'யென்'களாகும்.

கண் கெட்ட பிறகு ஞாயிறு வணக்கமா?

— (:) —

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை!

திருமங்கலத்தார் குரல் கமுறுகிறது!

மதுரை, டிச. 6—
"ஆச்சாரியாரை, வெளியேற்ற முயற்சிக்கிறார்கள்," என்று இங்கு, நடத்தப்பட்டப் பேச்சையில், மந்திரி ராஜாராம் குறிப்பிட்டதாவது:—

இலுப்பைப் பூ?

"ஆச்சாரியார் சிறந்த ராஜதந்திரி; உலக ராஜதந்திரிகளெல்லாம் அவரைப் போற்றுகிறார்கள்; அப்பேர்ப்பட்டவரை வெளியேற்ற முயலுவது அவருடைய தலைமையிலும், அனுபவத்திலும் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகளைத் தடுப்பதாகும் என்றார்.

யார் தவறு?

"ஆச்சாரியாரை வகுப்புத் துவேஷி என்பது தவறு; உயர்ந்த பதவிகளையெல்லாம் பார்ப்பனர்களுக்கே அளிக்கிறார் என்பதும் தவறு; சென்னை அரசாங்க காரியதரிசிகள் 9 பேரில், 5 பேர் பார்ப்பனரல்லாதார் என்பது குறிப்பிடத் தக்கது. மாவட்ட அதிகாரிகளில் பெரும்பாலோர் பார்ப்பனர்களாக இருந்தால் அது ஆச்சாரியாரின் தவறல்ல.

அரசியல் சட்டம்?

"நீதிபதிகளாக இரண்டு பேர் நியமிக்கப்பட்டார்களே, அதற்கு ஆச்சாரியாரைக் குறைகூற முடியாது; ஏனெனில், அவர்கள், பிரதம நீதிபதியின் சிபார்சின் பேரில் இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்கள்."

"புதிய கல்வித் திட்டத்தைப் பற்றிப் பேசுகையில், அவர் கூறியதாவது:—

ரகசியமென்ன?

"திட்டத்தை நாடெங்கணுமுள்ள நிர்வாகிகள் வரவேற்கிறார்கள்; தங்களது மாநிலங்களில் திட்டத்தை அமுலாக்கத் துடிக்கிறார்கள்; இந்தப் புதிய கல்வித் திட்டம் ஒரு சமூகத்தினரைப் பாதிக்கிறதென்றால், அது பிராமணர்களைத்தான்; ஆனால், அவர்கள் எதிர்க்காமலிருப்பது ஆச்சரியமே! அதற்கு மாறாகத் திட்டத்தால் பலன் பெறக்கூடியவர்கள் எதிர்க்கிறார்கள்," என்றார்.

இறுதியாக ஆச்சாரியார் பற்றிப் பேசுகையில் அவர் கூறியதாவது:—

கண் கெட்ட பிறகு!

"இந்த மாநில காங்கிரஸ் தலைவர்களுக்குள் ஏதாவது கருத்து வேற்றுமை இருந்தால் அவைகளை தீர்த்துக் கொள்ள வட்டுவிட வேண்டும்; அல்லது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் மூலம் தீர்க்கப்படல் வேண்டும்; இது முற்றிலும் குடும்ப விவகாரம்; இந்தத் தலைவர் அல்லது அந்தத் தலைவருக்கு ஆதரவாகக் கிளர்ச்சி நடத்துவது சரியல்ல"

குரு பக்தி!

"ஆச்சாரியார் பதவியிலிருந்தாலும் சரி, இந்த மாநில மக்களுக்கு யோசனைகூறி வழிகாட்டுவார்," என்று பேசி முடித்தார்.

நேருவுக்கு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பத்தில் அளவிடற்கரிய பிளவும் பேதமும்தான் விளைவாகியுள்ளது."

பம்பாய் காங்கிரஸ் கமிட்டி தலைவர் எஸ். கே. பாட்டீல் தலைமையில், மொழிவழி மாநில அமைப்பைக் குலைப்பதற்கு என்றே துவக்கப்பட்டுள்ள தேசிய ஒற்றுமை பிரசார ஏற்பாட்டை மாநாடு கண்டித்திருக்கிறது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தில், யூனியன் சர்க்காருக்கும், பிரதமருக்கும், கர்நாடக ஒற்றுமையிலும், கர்நாடக மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் நல்லெண்ணமும் இருக்குமானால், கர்நாடக மாநில அமைப்பை உடனடியாக ஏற்படுத்துவதுதான் என்றும் கூறப்பட்டு இருக்கிறது.

"இம்மாநாட்டின் கோரிக்கைக்கு யூனியன் சர்க்கார் இணங்க மறுத்தால், நேரடி நடவடிக்கையை விலக்க முடியாததாகும்."

இதற்கான அதிகாரத்தையும், செயற்குழுவிற்கு அதிகாரமும் மாநாட்டினரால் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

"மொழி வழி மாநிலம் கேட்டவர்கள் எல்லாம் நேருவிற்கு நாட்டுப் பற்று இல்லாதவர்களாகப் படுகிறது. நிர்வாக நலனுக்காகத்தான் மாநில அமைப்புகள் இருக்க வேண்டும் என்பது தவறான கொள்கையாகும். மக்களின் நலனுக்காகத்தான் மாநில அமைப்பு இருக்க வேண்டும்."

என்றும் காரந் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

தூத்துக்குடி சதி வழக்கு:

"ஆட்களை அடையாளம் காட்ட முடியாது!"

—(0)—

"நான் கதர்தான் அணிவது வழக்கம்"

திருநெல்வேலி, டிச 4—

தூத்துக்குடி கலவர வழக்கு இன்று மீண்டும் விசேஷ மாஜிஸ்திரேட் திரு என் அரிகர அய்யர் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிராசிக்யூஷன் சார்பில் மேலும் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

8-வது சாட்சி

8-வது சாட்சியாக செல்லம் அய்யங்கார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"நான் ரிடையர்ட் சப்-ரிஜிஸ்திரார்; தூத்துக்குடி ஆண்டாள் தெருவில் வசித்து வருகிறேன்; ஜூலை 15-ந் தேதி டிரெயின்கள் நிறுத்தப்பட்டன; காலை சுமார் 7 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து பெலூருக்கு வந்த டிரெயின் நிறுத்தப்பட்டது, சுமார் 300 கெஜம் தூரம் வரை சென்றவுடன் அந்த டிரெயின் நின்றுவிட்டது; — ரயில்வே பாதையில் சுமார் 150 பேர்கள் உட்கார்ந்ததே காரணம்; ரயில்வே காம்பவுண்டில் இருமருங்கிலும் சுமார் 1000 பேர்கள் கூடியிருந்தனர்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்கள், 'நேரு சர்க்கார் ஒழிக,' 'போலீஸ் ஒழிக,' 'ஆச்சாரியார் ஆட்சி ஒழிக,' ஆகிய கோஷங்களை எழுப்பினர்; டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது; அவர் ஸ்தலத்திற்கு வந்து பாதையில் உட்கார்ந்திருப்பவர்களைக் கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டார்; முதலில் அவர் தி மு கழகத் தலைவர்களில் சிலருடன் பேசிக்கொண்டிருந்தார்; பாதையில் உட்கார்ந்திருப்பவர்களைக் கலைந்து செல்லுமாறு அவர் கேட்டுக் கொள்ள தந்த நேரத்தில் கலெக்டரும் ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தார்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்களின் தலைவர்களிடம் அவர் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்; சுமார் 6 பேர்கள் போலீஸ் லாரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்; அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டேன்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்களைக் கலைந்து செல்லுமாறு சப்-கலெக்டரும் கேட்டுக்கொண்டார்; அவர்கள் கலைந்து செல்லவில்லை; அவர்கள் மீது ரிசர்வ் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; பிறகு போலீஸ் மீது, ரயில்வே காம்பவுண்டுக்கு இருமருங்கிலும் நின்று கொண்டிருந்த கூட்டம் கற்களை வீசியது; தடியடிப் பிரயோகம் நிறுத்தப்பட்டது; பிறகு கலெக்டர் ஸ்தலத்திலிருந்தவர்களும் கூட்டத்தின் தலைவருடன் அவர் பேசிக்கொண்டிருந்தார்; போலீஸ் லாரியில் உட்கார்ந்திருந்தவர்கள் பிறகு விடுதலை செய்யப்பட்டனர்; பிறகு அவர்களும் பாதையில் உட்கார்ந்து கொண்டனர்; மலபார் விசேஷ போலீஸ் வந்தது. அமைதியாகக் கலைந்து செல்லுமாறு கூட்டத்தினரைக் கலெக்டர் கேட்டுக்கொண்டார்; என் வீட்டின் கதவுகளை மூடும்படி அவர் என்னைக் கேட்டுக் கொண்டார்; நான் கதவை மூடிவிட்டு வீட்டிற்குள் இருந்தேன்; சில நிமிடம் கழித்துத் துப்பாக்கி வேட்டுச் சப்தத்தைக் கேட்டேன்; டிரெயின் சென்ற சப்தமும் கேட்டது; சில நிமிடம் கழித்து என் வீட்டின் கதவைத் திறந்தபோது, சிலர் காயமுற்றோ அல்லது மாண்டோ கிடந்ததைக் கண்டேன்; கலெக்டர் உத்தரவின்பேரில் காயமுற்றவர்களுக்குத் தண்ணீர் கொடுத்தேன்; பிறகு, டாக்டர் ரங்கசாமி காயமுற்றவர்களுக்கு சிகிச்சை அளித்தார்; போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

"ஸ்தலத்தில் பிரசன்னமாயிருந்த தலைவர்களையோ, முக்கியஸ்தர்களையோ நான் அடையாளம் காட்டுவது இயலாது."

இச் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

9-வது சாட்சி

பிராசிக்யூஷன் தரப்பில் 9-வது சாட்சியாக சுப்பிரமணியம் செட்டியார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"தூத்துக்குடியில் பருத்தி தரகர் தொழில் நடத்துகிறேன்; நான் 'தினத்தந்தி'யின் கௌரவ நிருபருமாவேன். வேலை நிமித்தம் கோவில்பட்டிக்குத் தினசரி டிரெயினில் செல்கிறேன்; என்னிடம் ஒரு சீசன் டிக்கெட் உண்டு; 2 அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பு காலை 6-25 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து புறப்படும் டிரெயினில் ஏறினேன்; இந்த டிரெயின் மேலூர் ஸ்டேஷனை சேருவதற்கு 2 அல்லது 3 பர்லாங் நின்றுவிட்டது; அபாய அறிவிப்புச் சங்கிலி இழுக்கப்பட்டதால் டிரெயின் நின்றதைத் தெரிந்து கொண்டேன்; காலை 7-மணிக்கு டிரெயின் மேலூர் ஸ்டேஷனில் நின்றது; ரயில்வே எஞ்சின் முன் ஒரு கூட்டம் உட்கார்ந்து கொண்டிருந்தது; இவர்களைக் கலைந்து செல்லுமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்டும், இவர்கள் கலைந்து செல்லவில்லை; டிரெயின் கதவுகளை மூடிவிடுமாறு எங்களை அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்; நான் என் வண்டியின் கதவுகளை மூடிவிட்டேன்; பிறகு துப்பாக்கி வேட்டுச் சப்தத்தைக் கேட்டேன்; டிரெயின் சிறிது தூரம் நகர்ந்து எட்டயபுரம் ரஸ்தாவில் மூலைக்கு வந்து வாயில் அருகே நின்றது; எஞ்சின் பக்கத்தில் சிலர் கிடப்பதைக் கண்டேன்; நான் டிரெயினிலிருந்து கீழே இறங்கி வெளியே செல்ல நினைத்தேன்; ஆனால், நான் கீழே இறங்குவதற்குச் சாத்தியப்படவில்லை; ஆகவே, வண்டிக் கதவுகளை மூடிவிட்டு வண்டிக்குள்ளேயே இருந்துவிட்டேன்."

குறுக்கு விசாரணை

திரு. எம். செல்லப்ப பிள்ளையால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், சாட்சி கூறியதாவது:

"என்னுடன் 7 அல்லது 8 பேர்கள் இருந்தனர்; அபாயச் சங்கிலி இழுக்கப்பட்டதால் டிரெயின் நின்றுவிட்டதாக அவர்கள் கூறியது என் காதில் விழுந்தது."

திரு. பி. ஏ. தங்கசாமியால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"துப்பாக்கி வேட்டுச் சப்தம் கேட்பதற்கு 10 நிமிடத்திற்கு முன்பு வண்டியின் கதவுகளை மூடும்படி தாசில்தார் என்னிடம் கூறினார், தங்கியிருக்கும் மற்றவர்களும் ரயிலை விட்டு இறங்கு வெளியே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தனர்."

திரு. கந்தையாவால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"நான், கதர் துணிதான் கட்டுகிறேன்; காங்கிரஸ் கட்சியின் 4 அணா மெம்பராகக் கூட இல்லை நான் காங்கிரசிடம் அனுதாபம் காட்டி வருகிறேன்; 1935-ம் ஆண்டு முதற்கொண்டே நான் கதர் உடுத்துகிறேன்; சம்பவம் நடந்த தினத்தன்று, விஷயத்தை 'தினத் தந்தி'க்கோ அல்லது வேறு எந்தப் பத்திரிகைக்கோ தெரிவிக்கவில்லை."

10-வது சாட்சி

10-வது பிராசிக்யூஷன் சாட்சி கடலைமுத்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"ஆயுத ரிசர்வ் போலீசில் நான் ஜமேதாராக வேலை பார்க்கிறேன்; 10 பேருக்குத் தலைவன் நான்; ஜூலை 15-ந் தேதி நான் மேலூர் ஸ்டேஷனில் விசேஷ ட்யூட்டியில் இருந்தேன்; காலை வண்டியின் முன் ரயில்வே பாதையில் சுமார் 100 பேர்கள் உட்கார்ந்திருந்தனர்; கலைந்து செல்லுமாறு அவர்களை சப்-இன்ஸ்பெக்டர் ஜெகநாதன் கேட்டுக்கொண்டார்; அவர்கள் கோஷமிட்டனர்; பிறகு டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தார்; பாதையிலிருந்து அமைதியாக வெளியேறுமாறு அவர்களை அவர் கேட்டுக்கொண்டார்; ஆனால், அவர்கள் அசையவில்லை; பிறகு சப்-கலெக்டர் வந்து 5-வது எதிரியைக் கூப்பிட்டார். (5-வது எதிரியை சாட்சி அடையாளம் காட்டினார்) அவர்கள் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர்; பிறகு கூட்டத்திலிருந்த 4 அல்லது 5 பேர்களை கைது செய்யப்பட்டு போலீஸ் லாரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்; அவர்களை விடுதலை செய்யுமாறு கூட்டம் கோஷமிட்டது; எச்சரிக்கை செய்த பிறகு தடியடிப் பிரயோகம் செய்யுமாறு டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு உத்தரவிட்டார்; நான் அவர் உத்தரவுப்படி நடந்தேன்; என் படையினர்களை பாதையில் உட்கார்ந்தவர்களிடம் அழைத்துச் சென்று அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தேன்; அப்படியும் அவர்கள் கலையவில்லை; எதிர்ப்புறம் நின்ற சிலர் போலீசார் மீது கற்களை வீசினர்; நெ. 1864, நெ. 1773 கான்ஸ்டேபிள்களுக்குக் கல்லடி காயம் ஏற்பட்டது. தடியடிப் பிரயோகத்தை நிறுத்துமாறு டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு உத்தரவிட்டார்; ஜில்லா கலெக்டரும் ஸ்தலத்திற்கு வந்தார்; மலபார் போலீஸ் ஒரு பகுதி வந்தது; ஆனால், என் படையினரும் ஆண்டாள் தெருவுக்குச் செல்லுமாறு உத்திரவிடப்பட்டோம்; மலபார் போலீசார் எஞ்சின் முன் நின்றனர்; கலெக்டர் 5-வது எதிரியையும், மற்றவர்களையும் கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்; கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்; கூட்டம் கற்களை வீசியது; பிறகு மலபார் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; மேலும் கூட்டத்தினர் போலீசார் மீது கற்களை வீச ஆரம்பித்தனர்; துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுமென டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு எச்சரித்தார்; பிறகு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது; மலபார் போலீசாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; 16 ரவுண்டுகள் சுடப்பட்டன; பிறகு கூட்டம் கலைந்து சென்றது; டிரெயினும் நகர்ந்து சென்றது; டாக்டர், காயமுற்றவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்தார்; காயமுற்றவர்கள் திரட்டப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்; இரண்டு நாட்கள் கழித்த பிறகு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

குறுக்கு விசாரணை

திரு எம். செல்லப்ப பிள்ளையால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:

"டிரெயினின் வலதுபுறத்தில் நாங்கள் நின்று கொண்டிருந்தோம்; டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு உத்தரவுப்படி நாங்கள் 10 நிமிடம்வரை தடியடிப் பிரயோகம் செய்தோம்; சமயப் பிரயோகத்துக்குப் பிறகு எல்லா திசைகளிலிருந்தும் எங்கள் மீது கற்கள் வீசப்பட்டன; நெ 535 ஹெட் கான்ஸ்டேபிள் சட்ட விரோதமாகக் கூடியுள்ள கூட்டம் கலையாவிடில் தடியடிப் பிரயோகம் செய்வோம் என்று கூறினார்; அவர் எங்களுக்கு முன் 3 அடி தூரம் சென்று இந்த எச்சரிக்கையை விடுத்தார்; ஏராளமாக கற்கள் வீசப்பட்டன; ஹெட் கான்ஸ்டேபிள் உரத்த குரலில் மேற்படி எச்சரிக்கையை விடுத்தார்."

திரு. பி. ஏ. தங்கசாமியால் சாட்சி விசாரணை செய்யப்படுகையில் கூறியதாவது:—

"கலெக்டர் வருவதற்கு முன்பே மேற்குறிப்பிட்ட கான்ஸ்டேபிள்கள் காயமுற்றனர்; மலபார் போலீசைச் சேர்ந்தவர்கள் யாருக்காவது கல்லடிக் காயமேற்பட்டதா என்று என்னால் கூற முடியாது; என் படைக்கு 70 கெஜ தூரத்தில் கூட்டம் நின்று கொண்டிருந்தது" என்று கூறினார்.

11-வது சாட்சி

"11 வது பிராசிக்யூஷன் சாட்சியாக குட்டிகிருஷ்ண நாயர் பிறகு விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"ஜூலை 15-ந் தேதி தூத்துக்குடியில் ட்யூட்டியில் இருந்த ரிசர்வ் போலீஸ் படையைச் சேர்ந்த கான்ஸ்டேபிள் நான்; எனது வலது தொடையில் காயமேற்பட்டது. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றேன்."

இத்துடன் இன்றைய விசாரணை முடிவுற்றது. —ந நி

மதுரையில் கருணாநிதி

13—12—53 ஞாயிறு காலை 11 மணிக்கு, தோழர் மு. கருணாநிதி அவர்கள் தூத்துக்குடி எக்ஸ்பிரசில் மதுரை வந்து சேருகிறார்; புகைவண்டி நிலையத்தில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்படும்.

மாலை 5 மணிக்கு, மதுரை நகர் தி மு. கழகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நான்கு மாசி வீதிகள் சுற்றி, திலகர் திடல் வந்து சேரும். ஊர்வலத்தில் புரட்சி நடிகர் எம். ஜி ராமச்சந்திரன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியவர்களும் கலந்துகொள்வார்கள்.

மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி இரா. சத்தியேந்திரன், காஞ்சி-கல்யாணசுந்தரம், இளமுருகு பொற்செல்வி ஆகியோர் பேசுவர்.

இரவு 10 மணிக்கு, மதுரை செல்லம் தியேட்டரில், எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி சக்ரபாணி குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு' நாடகம், மு. கருணாநிதி தலைமையில் நடைபெறும்.

★

பூந்தோட்டத்தில்

8—12—53 செவ்வாய் மாலை 6 மணிக்கு, தோழர் மு. கருணாநிதிக்கு, பூந்தோட்டத்தில், தோழர் க.கே. நீலமேகம் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெறும். கோரடாச்சேரி தோழர் எம். எம். வைத்திலிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

சர்க்கார் பொறுப்பில் உள்ள பால் தூளில் கள்ளச் சந்தை

இங்குள்ள பால் தூளை பம்பாய்க்குக் கடத்திச் செல்லும் சயவர்கள்

பம்பாய், டிச. 5—

பம்பாய் போலீஸ் சமீபத்தில், 50 டன் பால் பவுடரை கைப்பற்றினது; இதிலிருந்து, சென்னை—பம்பாய் வர்த்தகர்களிடையே கள்ளக் கடத்தல் நடந்து வந்திருப்பது அம்பலமாகியிருக்கிறது.

கடந்த இரண்டாண்டுகளாக பால் பவுடரை விநியோகிக்கும் உரிமை, மாகாண சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது; இது முதல், சென்னையிலிருந்து ஏராளமான பால் பவுடர் கடத்தப்பட்டு வந்து, பம்பாயில் மொத்தமாக விற்கப்பட்டு வந்தது.

இதன் விளைவாக, சர்க்கார் கிட்டங்கியிலிருந்து பால் பவுடர் விற்பனையாவது 30 சதவிகிதம் குறைந்து போயிற்று. இதனால் சர்க்காருக்கு சந்தேகம் ஏற்பட்டு இதற்குக் காரணம் விசாரிக்கப்பட்டு வந்தது. விசாரணையில், பம்பாய்க்கும் — சென்னைக்கும் இடையே கள்ளத்தனமாக பால் பவுடர் கடத்தல் நடந்துகொண்டிருப்பது தெரிந்தது. கடந்த 15 நாட்களாக ரயில் நிலையங்களிலிருந்து 50 டன் பால் பவுடர் கைப்பற்றப்பட்டது. அந்த பால் பவுடர் டின்கள் வேறு பெயரில் காணப்பட்டன.

பால் பவுடர் விலை சர்க்காருக்கு ராத்தல் 12 அணாவாக அமைந்துள்ளது. இப்பவுடர் ராத்தல் 2 ரூபாயாக விற்கப்படுகிறது.

சென்னையில் பால் பவுடர் விலை குறைவாதலால் கள்ளத்தனமாக கடத்தப்பட்ட பால் பவுடர் ரூ 1—7—0, 1—9—0 வரை விற்கப்படுகிறது.

சென்னை கவர்னரின் அவசரச் சட்டம்

சென்னை, டிச 5—

சென்னை மாகாணத்தில் கடன் பட்டுள்ள விவசாயிகட்கு, தற்காலிகமான நிவாரணம் அளிப்பதற்கான அவசரச் சட்டம் ஒன்றை, சென்னை கவர்னர் இன்று பிறப்பித்துள்ளார். இந்த அவசரச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வருமெனத் தெரிகிறது.

மகிழ்ச்சிப் பெருக்கு!

புத்திரகவுண்டம்பாளையம், டிச. 5

தி. மு. கழகத் தலைவர்கள் விடுதலையை முன்னிட்டு, இவ்வூர் தி. மு. க. புகைவண்டி நிலையத்தில், சிறையில் தலைவர்கள் இருப்பது போலவும், சிறைக் கதவு போலீஸ்காரர் திறப்பது போலவும் அலங்கரித்து, 30—11—53 காலை 9 மணிக்கு தோழர்களுடன் கழகச் சிறைக் கதவைத் திறந்து வைத்து, மிட்டாய்கள் வழங்கப்பட்டன.

* * *

ஒரத்தநாடு, டிச. 5—

இவ்வூர் தி. மு. க. கட்டிடம், மேற் குறிப்பிட்டவாறே அலங்கரிக்கப்பட்டு, 1—12—53 காலை 8 மணிக்கு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மிட்டாய், சுடலை, பொரி, பழம், வெற்றிலைபாக்கு வழங்கப்பட்டன.

'தமிழை உண்டாக்கியவன் அகத்தியனல்ல'

பசுமலையில் சோமசுந்தர பாரதியார் சொற்பொழிவு

பசுமலை, டிச. 4—

பசுமலை உயர்நிலைப்பள்ளி திருவள்ளுவர் மாணவர் கழகத்தில் டிச. 2-ம் தேதி மாலை 8½ மணிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் திரு. ஆ. மைக்கேல் பொன்னுசாமி தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் 'திருவள்ளுவர்' என்ற பொருள் பற்றி விரிவுரையாற்றினார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழர் எதையும் சிந்திப்பதில்லை; உண்மையை ஆராய்வதில்லை; எல்லாவற்றையும் கற்பனை செய்யத் தொடங்கிவிட்டார்கள்; இது பெருங்குறை.

அகத்தியன் தமிழை உண்டாக்கவில்லை. தமிழ் என்றும் உள்ளது. இதற்காகவே, 'என்றுமுள தென்தமிழ்' என்றார் கம்பர்.

உண்மை வரலாற்றை ஆராய்ந்து காண வேண்டும். வள்ளுவன் என்பது தொழிற்பெயர். அவர் சாக்கை மன்னருக்கு உட்படு கருமத் தலைவராக இருந்தார். வள்ளுவரின் காலம் 2500 ஆண்டுகட்கு முந்தியதாகும்.

இவ்வளவு அருமையான நூலைத் தந்த மொழியின் இலக்கணம் ஐந்நூறு ஆண்டுகட்கு முன் சிறப்புற்று விளங்கியதாகும். எந்தப் பழைய மொழியிலும் குறளைப் போன்ற நூலைக் காண முடியாது," என்றார்.

"தமிழ்—ஆட்சிமொழி ஆகவேண்டும்"

எ. கஜபதியார் சுற்றுப் பயணம்

சென்னை மேல்சபை உறுப்பினரும், தமிழ்—ஆட்சி மொழி சட்ட மசோதாவின் கர்த்தாவுமாகிய திரு கஜபதியார், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற பொருள் பற்றி, திருவள்ளுவர் கழகங்கள் சார்பில் பழனி, கோவை, சேலம் முதலிய இடங்களில் பேசிவிட்டு சென்னை வந்துள்ளார்.

28—12—53-ல் நடைபெற இருக்கும் மேல்சபைக் கூட்டத்தில், இம்மசோதாவின் ஆதரவை சீட்டு குலுக்குத் தேர்வில் முன் வர, டி. எம். நாராயணசாமி பெயரில் இம் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உருவப்படத் திறப்பு

கிருஷ்ணகிரி, டிச. 1—

30—11—53ல் நடைபெற்ற இவ்வூர் பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில் பல ஆண்டுகளாக பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்தவரும், ஏழை பங்காளருமான தோழர் ஜி. அனுமந்த நாயுடு அவர்களின் உருவப் படத்தை பஞ்சாயத்து போர்டு கட்டிடத்தில் திறந்து வைப்பதென உறுப்பினர் தோழர் எம். அனிபான் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பகுத்தறிவு மன்றம் துவக்க விழா

பசுவிலை (சிலோன்), டிச. 5—

1—12—53-ல், தோழர் ஆ. மாணிக்கமணி தலைமையில் மேற்படி மன்றம் துவக்கப்பட்டது. தோழர்கள்: ஆ. அகிருட்டினை செயலாளராகவும், மா. ராசபாண்டியன் உபசெயலாளராகவும், ம. அருணகிரிநாதன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

குற்றக் கூண்டில் ஆச்சாரியார்!

உ. பி. இளைஞர் நாடகத்தில் ஒரு காட்சி

லக்னோவில் மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்த நிகழ்ச்சியைக் குறிக்கோளாக வைத்து உ. பி. இளைஞர் ஒருவர் ஒரு நாடகத்தைத் தீட்டியுள்ளார்.

இந்த நாடகத்தின் கடைசி கட்டத்தில் ஒரு யமதர்ம தர்பாரை உருவாக்கியுள்ளாராம். அந்தக் காட்சியில் இந்திய அரசியல் தலைவர்கள் பலர் குற்றக்கூண்டில் நிறுத்தப்படுகின்றனர். அவர்களோடு சென்னை முதலமைச்சர் ஆச்சாரியாரும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்படுகிறார். பிரதமர் அச்சாரியார் முழங்கால் வரை இரத்தத் தடாகத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார். இந்தச் செய்தி 28-11-53 'பிளிட்ஸ்' இதழில் வெளிவந்துள்ளது.

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம்

சென்னை, டிச. 5—

3—12—53ல், தோழர் வி. பெரியசாமி தலைமையில் நடைபெற்ற அங்கத்தினர் கூட்டத்தில், புதிய செயற்குழுவினராக தோழர்கள் வி. பெரியசாமி செயலாளராகவும், ஆர். பி. கனி துணைச் செயலாளராகவும், முனுசாமி பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக டி. ஆர். சந்திரன், கோ. சுந்தரேசன், ஏ. எஸ். நாதன், என். நாராயணன், என். எஸ். இராசு, ஏ. என். மாணிக்கம், செ. திரவியம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அடுத்து நடந்த செயற்குழு கூட்டத்திற்கு கோ. சுந்தரேசன் தலைமை வகித்தார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கல்நாட்டு விழா

29—11—53ல், வதியம் ஊராட்சி மன்றத்தால் புதிதாகக் கட்டப் போகும் (மேல வதியம் திரு கே. ஆண்டியப்பன் அவர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டது) அலுவலகத்திற்கு தோழர் கே. ஆர். வையாபுரி சோழகர் தலைமையில், டி. ஜி. சிவானந்தம் அவர்கள் அஸ்திவாரக் கல் நட்டார். திரு. டி. எம். ராமசாமி பேசினார். திரு வி முத்துசாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கவிதை அரங்கேற்றம்

மாயூரம், டிச. 5—

29—11—53-ல, டி. கே. டி சாமி தலைமையில், தோழர்கள் சேகலதான், பாலசுப்ரமணியம் முன்னிலையில், தோழர் வி ஏ. பாண்டியன் அவர்களால் இயற்றப்பெற்ற 100 கவிதைகளையும் பாண்டியன் பாசறையில் அரங்கேற்றப்பட்டது.

தி. மு. கழகச் செய்திகள்

★

திருச்செங்கோடு தி. மு. க. வட்டக்குழு தேர்தல்

21—11—53-ல் நடைபெற்ற தி. மு. கழக வட்டக்குழு தேர்தலில் செயலாளராக தோழர் ஏ. வரதராசனும், துணைச் செயலாளராக தோழர் சி. முத்துசாமியும், பொருளாளராக தோழர் எ. ராஜகோபாலும், சேலம் மாவட்ட கழகப் பிரதிநிதியாக தோழர் ப. முனியப்பனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இடையகோட்டை தி. மு கழக செயற்குழு கூட்டம்

1—12—53-ல், தி. மு. கழக செயற்குழு கூட்டம், வலையபட்டி தோழர் தங்கராசா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: மு. பன்னீர்செல்வன், கே. டி. பதி, ப. குப்புச்சாமி, என். கே. முத்துச்சாமி ஆகியோர் சிறை மீண்ட தலைவர்களைப் பாராட்டியும், நன்றி தெரிவித்தும் சொற்பொழிவாற்றினர்.

கலையர்புத்தூர் தி. மு. கழக செயற்குழு கூட்டம்

29—11—53ல, கழக அலுவலகத்தில், தி. மு. கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அப்போது வரவு செலவு கணக்கு சரி பார்க்கப்பட்டது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சூரப்பள்ளி தி. மு. கழகம்

23—11—53-ல், தி மு. கழக செயற்குழுக் கூட்டம், கழக இல்லத்தில், செயலாளர் கு. சிந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, கழகத்திற்கு தன இல்லத்தை தற்காலிகமாக இலவசமாய் அளித்த தோழர் என். கிருட்டிணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், நெசவாளர்களுக்கு வாழ வழி அளிக்க சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களையும், அனுதாபத் தீர்மானங்களையும் நிறைவேற்றியது.

பறங்கிப்பேட்டை தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

2—12—53-ல், தோழர் சுப்பிரமணியின் தலைமையில் சீர்காழி ஒளி, சேத்தியா தோப்பு சிவநேசன், தில்லை - வில்லாளன், பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ, ஆகியோர் புதிய கல்வித் திட்டம், அரசாங்க குடி வழக்கு, ஆட்சியாளரின் போக்கு ஆகியவைகளைக்குறித்து விளக்கவுரையாற்றினர்.

கிராம முன்னேற்ற சங்கம்

ராசபப்பன்சாவடி, டிச. 5—

30—11—53ல், மேற்படி சங்க சார்பில், ராயபுரம் கிராமத்தில் கூட்டம் நடந்தது. தோழர் கோவிந்தசாமி மேல்கொண்டார் தலைமை வகித்தார். தோழர் பி எஸ். பி. சாமி, "நம் நாடும், கல்வியும்" என்பதைப் பற்றிப் பேசினார்.

'தந்தையின் தொழிலை தனயனை கற்க சொல்வது அறிவுடைமையாகாது'

விருதுநகரில் நாடார் மகாஜன சங்கப் பொதுச் செயலாளர்

விருதுநகர், டிச. 4—

"புதிய கல்வித் திட்டத்தை எப்படிப் புகுத்துவது என்பதற்குத்தான் குழு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது; அப்படியில்லாமல், புதிய கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரலாமா என்று கேட்டிருந்தால் 'கூடாது' என்றுதான் குழு கூறியிருக்கும். "ஒரு தந்தையிடம், அவர் தொழிலைக் கற்றுக்கொள்' என்று கூறுவது அறிவுடைமையாகாது,"

என்று, இந்நகர் கே. வி. சாலை உயர்நிலைப் பள்ளியில் நடந்த பெ. சி. சி. நினைவுநாள் கூட்டத்தில் 23—11—53 அன்று பேசுகையில், நாடார் மகாஜன சங்கப் பொதுச் செயலாளர் ப. ரா. நூர்துசாமி கூறினார்.

சி. பி. ராமசாமி, அந்நியத் திட்டு போராட்டக் குழுத் தலைவராம்!

நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைப்பதா?

தலைவரின் அன்றைய போக்கு தரணி அறியாததா?

புதுடெல்லி, டிச. 6—

இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசியத் தீவுகளில் நடைபெற்று வரும் சுதந்திரப் போராட்டங்களுக்கு உதவுவதற்காக கடந்த இந்தியர் மத்திய சங்கத்தின் நிர்வாக சபை டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர் தலைமையில் ஒரு கமிட்டி நியமித்துள்ளது.

இதில் 50 உறுப்பினர்கள் இடம் பெறுவர். டாக்டர் சி. பி. ராமசாமியின் கருத்துப்படி உறுப்பினரைச் சேர்க்க அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் பொருளாதார நிலைமைக்குட்பட்டு மேற்படி போராட்டத்திற்குத் திரம்பட உதவி அளிப்பதற்கு, இக்கமிட்டி தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

மேற்படி அந்நியத் திட்டுகள் இந்தியாவிலிருப்பது அபாயத்து; எனவே, இதை ஒழிக்கும் சுதந்திரப் போராட்டத்திற்குப் பண உதவி செய்யும்படி பொதுமக்களை இச்சங்கம் கேட்டுக்கொள்ளும் வகையில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரிசி உற்பத்தி அதிகரிப்பு

விலை குறைய சிறிது காலமாகுமாம்

கல்கத்தா, டிச. 5—

"அரிசி இறக்குமதியை எதிர்பார்க்காமல், இந்தியா சமாளிக்கக் கூடிய நிலைமை, அநேக ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் முதல் தடவையாக ஏற்பட்டுள்ளது" என்று இந்திய உணவு மந்திரி கித்வாய் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: "அரிசி உற்பத்தி கடைசியிலும் அதிகரித்துள்ளது; நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்க அதிகரிக்க இன்னும் அதிக அரிசி உற்பத்தியை எதிர்பார்க்கலாம்" "இன்னும் ஆறு லட்சம் டன் கோதுமை வரவேண்டியிருக்கிறது; இப்போது அரிசி வாங்க நாம் வேறு நாட்டிடம் போக வேண்டியதில்லை."

"அரிசியின் விலை குறைய இன்னும் சில காலமாகும்; ஏனெனில் கண்ட்ரோல் நிர்வாகத்திற்காக சர்க்கார் ஏராளமாக செலவிட வேண்டி இருக்கிறது."

சர்க்கரை நிலைமை பற்றி கித்வாய் கூறுகையில், 'சகஜ நிலைமை ஏற்பட்டு வருவதாகவும், வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை பெற முயற்சிக்கப்படுவதால் விலை குறையாமல் இப்போதுள்ள நிலைமையையே நீடிக்கும்" என்றும் கூறினார்.

சர்க்கரை உற்பத்தி

புதுடில்லி, டிச 3—

"அடுத்துவரும் பருவத்தில் இந்தியாவில உற்பத்தியாகக் கூடிய சர்க்கரையின் மொத்த அளவு 12-லிருந்து 13 லட்சம் டன் வரை இருக்கக்கூடுமென்றும், செலவாகக்கூடிய சர்க்கரையின் மொத்த அளவு 16 லிருந்து 17 லட்சம் டன் வரை இருக்கக் கூடுமென்றும் மதிப்பிடப்படுகிறது. உள்நாட்டில சர்க்கரை உபயோகம் அதிகரித்திருக்கிறது. அதிகப்படியாகத் தேவையாயிருக்கும் சர்க்கரையை, உள்நாட்டில் உற்பத்தி பெருகும் வரை, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாக வேண்டும்," என்று, மக்கள் சபையில், கேள்வி நேரத்தின்போது அறிவிக்கப்பட்டது.

கர்ப்பத் தடை ஏற்றதல்ல!

கெய்ரோ, டிச 4—

"முஸ்லிம் நாடுகளுக்குக் கர்ப்பத்தடை ஏற்றதல்ல; மிகமிக அவசியம் என்றால்தான், இஸ்லாம், கர்ப்பத் தடையை அனுமதிக்கிறது," என்று முஸ்லிம் சகோதரத்துவ ஸ்தாபனத்தின் தலைவர் தன் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

"மக்கள் தொகை அதிகரித்துவிட்டது; உணவு விநியோகம் குறைந்துவிட்டது," என்கிற காரணத்தைக் காட்டி கர்ப்பத் தடை அவசியம் என்று விவாதிக்கப்படுகிறது; ஆனால், நாட்டில் உணவுப் பொருள்களைப் பெருக்க இன்னும் ஏராள வசதிகள் உள்ளன; அவைகளை எல்லாம் பயன்படுத்தவேண்டும்; முஸ்லிம் நாடுகள் மக்கள் தொகையை அதிகரிக்கவேண்டிய நிலைமையில் உள்ளன," என்று, மேலும் அவர் கூறியுள்ளார்.

தானியக் கிடங்கு கட்ட புது முறை

கெய்ரோ, நவ 30—

ஜோர்தானில் தானியக்கிடங்குகள் கட்ட ஒரு புதுமுறை கையாளப் பட்டுவருகிறது. பிரம்மாண்டமான ரப்பர் பலூனில் காற்றைப் புகுத்தி நிறுத்த வைத்து, மேல் பாகத்தின் மீது காங்கிரீட்டை ஊற்றி விடுகின்றனர். காங்கிரீட் இறுகியதும் ரப்பரை அகற்றிவிடுகின்றனர்.

இந்த கிடங்குகள் வட்டவடிவமான கோபுரங்கள்போல் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு கிடங்கிலும் 500 டன் தானியங்களை பாதுகாக்க முடியும். இந்த கிடங்குகள் மற்ற கிடங்குகளை விட மலிவானதாகவும், பலமுள்ளதாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. —கேபன்

அமெரிக்க அரசாங்க வரவு—செலவு

துணை நிதி அமைச்சரின் முன்னறிவிப்பு

நியூயார்க், டிச. 3—

அரசாங்கத்தின் செலவைக் குறைக்காவிட்டால் அடுத்த ஆண்டில் அரசாங்கத்தின் வரவு—செலவுத் திட்டத்தில், குறைந்தது, 750 கோடி டாலர்களாவது துண்டு விழுமென்று அமெரிக்க துணை நிதி அமைச்சர் கூறினார்.

நகர சபை வரி, கலால் வரி ஆகியவற்றை கொரியா போருக்கு முன்பு இருந்த அளவுக்கு உயர்த்தப் பாராளுமன்றம் மறுத்துவிட்டால், துண்டுவிழும் தொகை 925 கோடி டாலர் வரை உயரக் கூடுமென்றும் அவர் கூறினார்.

பிறப்பு

சென்னை கே என். இராசன் மனைவியார் சந்திரவள்ளி அம்மையாருக்கு 8—11—53 அன்று ஆண் குழந்தை பிறந்து தாயும்—சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது. — இந்த ரூ 1-ம் வரப் பெற்றோம்—நன்றி பு—ய—பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (சீ, ஆதிநாராயண செட்டி தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. [illegible]